# டொரண்டோ சீனியர்ஸ் ஹவுஸிங் கோர்பரேஷன்> டொம் ஹண்டர் அவர்களை பிரதம நிறைவேற்று அலுவலராக நியமிக்கின்றது.



மே மாதம் 16 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் வகையில், தமது முதலாவது பிரதம நிறைவேற்று அலுவலராக தோமஸ் (டொம்) ஹண்டர் நியமிக்கப்பட்டிருப்பதை டொரண்டோ சீனியர்ஸ் ஹவுஸிங் கோர்பரேஷனின் பணிப்பாளர்கள் சபை மகிழ்வுடன் உறுதிப்படுத்துகின்றது.

2015 ஆம் ஆண்டிலிருந்து பிரதம நிறைவேற்று அலுவலராகச் சேவையாற்றியுள்ள சிட்டி ஹவுஸிங் ஹெமில்டன் நிறுவனத்திலிருந்து டொரண்டோ சீனியர்ஸ் ஹவுஸிங் கோர்பரேஷனுடன் டொம் (Tom) இணைந்துகொள்கின்றார்.

இவர் ஒரு நம்பிக்கைக்குரிய தலைவரும் சமூகத்தைக் கட்டியெழுப்புபவரும் ஆவார். ஆதரவுசார் முதியோர் வீடமைப்பின் தரத்தை உயர்த்துவதற்கும் பாதிப்புறத்தக்க மக்களின் நல்வாழ்வை சமூக ஒத்துழைப்புக்கூடாக முன்னேற்றுவதற்கும் என இவர் வெளியக முகவராண்மைகளுடன் பங்காளராகச் செயற்பட்டுள்ளார்.

கூட்டுத்தாபனம் உத்தியோகபூர்வமாக தொழிற்பாடுகளை ஆரம்பிக்கும் ஜூன் 1 ஆம் திகதி, வாடகைக் குடியிருப்பாளர்களையும் பணியாளர்களையும் டொம் ஆர்வத்துடன் வரவேற்கின்றார்.

முன்கூட்டிய பதிவு பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு **torontoseniorshousing.ca** எனும் இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்

டொரண்டோ சீனியர்ஸ்
ஹவுஸிங் கோர்பரேஷன்

இந்த சுவரொட்டி உங்களுக்கு மாற்று மொழியில் அல்லது வடிவத்தில் தேவையெனில், 416-981-5500 எனும் இலக்கத்தினூடாக வாடிக்கையாளர் கவனிப்பு நிலையத்தைத் தொடர்புகொள்ளவும்.